1967 ஜுலை 7]

## தொத்துநோய் ஆஸ்பத்திரி, மதுரை

*204 வினு.—திரு. என். சங்கரய்யா : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை தத்தநேரி அருகிலுள்ள I.D. ஆஸ்பத்திரியைக் கப்பலூருக்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மதுரை தத்தனேரி அருகிலுள்ள தொத்துநோய் ஆஸ்பத்திரியை, மதுரை நகரத்தின் எல்லை ஓரமாகக் கட்டப்படவிருக்கும் புதிய தொத்துநோய் ஆஸ்பத்திரிக்கு மாற்றும் உத்தேசம் பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** அவ்வாறு மாற்றக் கூடிய நேரத்தில் மதுரை மக்களுக்குக் கூடுமானவரையில் சமீபத்தில் இருக்குமா ? அல்லது இப்போதுள்ள மருத்துவ மனையைவிட அதிகத் தூரத்தில் அமையுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிகிற நேரத்தில் அங்கத்தினர் அவர்களின் கருத்துக் கவனிக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பல்வேறு பொதுவிடங்களில் தொழுநோயால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பலர் பொது மக்களுக்கு இடையூறாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, புதிதாகத் தொழுநோய் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி அவர்களைக் கொண்டுபோய் அங்குக் குடியேற்றும் திட்டம் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கேள்வி தொத்து நோய் பற்றியது. அங்கத்தினர் தொழுநோய் பற்றிக் கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கலாம்.

**திரு. மா. இராசாங்கம் :** மதுரையில் உள்ள இந்த ஆஸ்பத்திரி, முன்யோசனையில்லாமல் ஐ.டி. மருத்துவ மனை சுடுகாட்டிற்கு வெகு அருகாமையில் கட்டப்பட்டு விட்டதால் வைத்திய மனோதத்துவ முறைக்கு அது மாறாகயிருப்பதால் இப்போது புதிய இடத்திற்கு மாற்ற வேண்டி வந்திருக்கிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுவும் ஒரு காரணமாயிருக்கலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** மதுரை ஐ.டி. மருத்துவமனை தத்தனேரி சுடுகாட்டிற்குப் பக்கத்தில் கட்டக் காரணம், மருத்துவ மனை கட்டப்பட்ட இடம் முன்னாள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களின் இடம் என்பதை இந்த அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை.

**திரு. நா. காசிராமன் :** தத்தனேரியில் கட்டப்பட்ட ஐ.டி. ஹாஸ்பிட்டல் எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.

### உப்பனுற்றின் குறுக்கே பாலம்

* **205 வினு.—திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய தல-நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சீர்காழி தாலுகாவில் திருநகரி-நல்லூர் ரோடு என்ற தொடர்ச்சியைத் தடுக்கின்ற உப்பனுற்றின் குறுக்கே பஸ் போக்கு வரத்துக்குரிய அளவில் ஒரு பாலம் கட்ட பரிசீலனை செய்து, மதிப்பீடு தயார் செய்து இருப்பதை நடப்பு ஆண்டிலேயே நடை முறைக்குக் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனை யிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப் படையாகக் கொண்டுதான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலை கள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. மங்கமடம் திருநகரி-நல்லூர் சாலையில் 3-வது மைல் 1-வது பர்லாங் பக்கம் ஒரு பாலம் கட்டுவதென்றும், அதைப் புது வேலைகளில் 3-வதாகச் சேர்ப்ப தென்றும் கிழக்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய் துள்ளது. மற்றும், இந்த வேலை நான்காவது நகல் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. 'இதர சாலைகளில்' தற்சமயம் 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில்சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக்கொள்ள இயலும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** இந்தச் சாலை பழைய பேரும் புகழும் பெற்ற காவிரிப்பூம்பட்டிணத்திற்குத் தொடர்ச்சியாக இருப் பதினுல் அப்படிப்பட்ட சரித்திரப் புகழ்பெற்ற இடத்தைச் சீரமைக்கவும், ஒழுங்குப்படுத்தவும் இந்தப் பாலம் மிக முக்கிய மானதாக இருக்கிறது. இது கட்டப்படவில்லை என்றல் 18 மைல் சுற்றளவிற்குச் சுற்றிப்போக வேண்டியிருப்பதால் இதற்கு முதல் சலுகை கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** காவேரிப்பூம்பட்டி ணத்தைப் புதுப்பிக்கிற முயற்சியை மேற்கொள்ளுகிற நேரத்தில், அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளுமானுல் நிச்சயமாகப் போவ தற்குள்ள வழியைத் தேடித்தான் ஆகவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடி வடைந்தன.

**குறிப்பு:**—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.